




ஓலை 193| ஓசை 316| செப்டம்பர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவியரசு முடியரசன்

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

பொருள்

எண்ணியவர்கள் தங்கள் எண்ணத்தில் உறுதியாக இருந்தால், அவர்கள் திட்டமிட்ட செயல்களைத் திட்டமிட்டபடியே நிறைவேற்ற முடியும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

இனியொரு முறை..

பாவகை : சந்தம் உருவகப்பா

இனியொரு முறைநான் பிறந்திட வேண்டும்!
இனியொரு முறைநான் பற்று கொண்டு
துணிவுடன் சிரித்துப் பிறந்திட வேண்டும்!
அணியாய்த் தமிழை அணிந்திட வேண்டும்!

என்தாய் மடியில் தவழ்ந்திட வேண்டும்!
என்வாய் திறந்து தாலாட்டுப் பாடி
என்தாய் உறங்க உதவிட வேண்டும்!
இன்தமிழ் தாய்க்கே ஊட்டிட வேண்டும்!

அருந்தமிழ் பாலுடன் அன்னைப் பாலை
அமுதப் பாலாய் ஊட்டிட வேண்டும்!
வரும்படி எண்ணி வழித்தடு மாறும்
வையத் தார்க்கே விழியாய் இருப்பேன்!

என்விரல் பற்றி எந்தை நடக்க
எதிர்படும் எவரும் வியந்திட வேண்டும்!
நன்தமிழ் மறந்த ஆசிரியர் எழுதி
நற்றமிழ் கற்றிடச் செய்திட வேண்டும்!

கோவிலில் தமிழைக் கேட்டு மயங்கிட
கடவுளும் தமிழைத் கற்றிடச் செய்வேன்;
மேவிடும் யாவும் தமிழாய் மணக்க
மன்னர் மகனாய்ப் பிறந்திட வேண்டும்!

சட்ட நூலும் வழக்கு மன்றமும்
தமிழில் மிளிர மாற்றிட வேண்டும்!
கட்டுக் கட்டா யுள்ள பணத்தான்
கனித்தமிழ் மட்டும் மணந்திட வேண்டும்!





நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

கவனம்

பாவகை : எண்சீர் விருத்தம்

விளம் + காய் + விளம் + காய்



கல்வியைக் கசடறவே
கற்றிடல் மேன்மையாமே
கல்லிய ஆற்றலுடன்
கற்றதை விரித்திடுவாய்

நல்வழிப் பாதையிலே
நடந்திட வழிகாட்டி
நன்மையைச் செய்திட்டே
நாளுமே வாழ்ந்திடுவாய்

மல்லலைச் சேர்த்தாலும்
மாண்புடன் பணிந்திடுவாய்.
மன்னியச் செல்வத்தை
மகிழ்வுடன் ஈந்திடுவாய்

வல்லமை கொண்டேநீ
வறுமையை விரட்டிடுவாய்
வாடியே கிடக்காமல்
வனப்புடன் சிறப்பாயே.

கவிஞர் செ. கலைவாணி

க. பதவுரை குற்றம் இழைத்த கொடுமை
பழிப்புரை ஏற்கும் அடி

உ. பொய்கை சுரக்கச் செழிக்கும் உலகு
புரையுரைக்கத் தேயும் அகம்.

ங. நழுவல் பொழுதுகள் நெஞ்சம் இறுக்க
தழுவல் மறுத்த மலர்.

ச. உண்ண மறுத்து வடந்தை நுகர்ந்து
வடிவம் துறந்த சுடர்.

ஞ. பயிலலும் ஈட்டலும் ஈதலும் போற்றும்
உழவன் உறையும் நிலம்.



உன் தோள் சாய வேண்டும்

பாவகை: தரவு கொச்சகக் கலிப்பா

கண்ணீரில் நான்நனைய கவலைகளுள் வாழ்வணைய
வண்ணங்கள் இழக்கிறதோ வானவில்லும் என்வானில்
எண்ணுகிறேன் எனக்கென்று யார்இருக்கார் தோள்சாய
கண்டதெல்லாம் வலிகள்தான் கையறுந்த என்நிலைதான்

எதற்கும்நீ கலங்காதே இந்நிலையும் நிலைக்காதே
விதவிதமாய் யோசிக்கும் வேலைகளும் வேண்டாமே
உதறிவிடும் கலைகற்றால் உள்நெஞ்சும் உடையாதே
பதறாமல் தோல்விகளை படியாக்கு முன்னேற

அடுத்தவரை எதிர்பார்த்தால் அமைதியதும் பூக்காதே
உடுத்திடுவாய் உனைநீயே ஊக்கத்தின் பொருளெனவே
கொடுத்திடுக உன்தோளை கொல்கின்ற வலியினிலே
எடுத்திடுக நல்முடிவை எதற்கும்நீ துணிந்திடவே



கவிஞர் பூர்ணிமா சங்கர்

வாழ்த்து

இத்தனைநாள்
வெறுமனே சேமித்து
வைத்திருந்த
அலைப்பேசி எண்ணிலிருந்து
இன்று வந்திருக்கிறது
எனக்கு
பிறந்தநாள் வாழ்த்து.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

நள்ளிரவு நிலவு



கார்மேகம் சூழ்ந்த இந்த அந்தி வானில்
நடுவே ஒரு மெல்லிய வெளிச்சத்தின் கீற்று
ஊரெங்கும் நிசப்தத்தில் உறங்கிக் கிடக்க
நான் மட்டும் நிலவோடு பேசும் தனிமை

அமைதியாய் அழகாய் நிலா ஒளி வீச
இருண்ட இராப்பொழுதும் அழகாய் மாற
நிலவைக் காணும் அந்த ஒரு நொடியில்
மனதில் ஏதோ புதுப் புன்னகை பூக்கும்

சிந்தனைகள் அகன்று நெஞ்சில் புது உணர்வு தோன்றும்
அறியா நினைவுகள் அலையாய் மோதும்.
காரிருள் சூழ்ந்த என் நடைபாதையில்
நிலவின் வெளிச்சம் வழிகாட்டிக் கூட்டும்

பகலில் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கம்
உடலையும் மனதையும் வாட்டிப் பிழிய
இரவினில் மலரும் இந்த நிலவின் ஸ்பரிசம்
உள்ளமும் உடலும் குளிரச் செய்யும்

மௌனத்தின் மொழியில் கவிதை பேசும்
நள்ளிரவு நிலவே எந்தன் தோழியானாய்
இரவின் மடியில் அமைதி தந்து,
என் எண்ணக் கனவுகளுக்கு உயிரும் தந்தாய்

விடியும் வரையில் உன்னோடு பேச
என் மனதும் ஏங்கி நிற்பதேனோ

கவிஞர் ரிஸ்மா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

காலத்தின் சுவடு

நதியின் ஓட்டம்போல் நகர்கிறது காலம்!
கதைகளாய்ப் பதிகின்றன கடந்த காலங்கள்!
விதைகளாய் மாறும் இன்றைய நிகழ்வுகள்!
சிறுவயதுப் பருவத்தின் சிரிப்பலைகள் நினைவினிலே!
பள்ளிப் பருவத்தின் நினைவுகளோ மனத்திரையில்!

காலத்தைக் கடந்து நிற்கும் நண்பர்களின் நேசம்!
நேசத்தின் நினைவலைகள் நெஞ்சத்தை வருடும்!
மழைத்துளிபோல் கரைந்தோடும் மணித்துளிகள் நாளும்!
பிழைகள் கற்றுத்தந்த பாடங்கள் ஏராளம்!
மரத்தின் வளையங்கள் வயதினைக் காட்டும்!
மனிதனின் அனுபவங்கள் வாழ்வியலைத் தீட்டும்!

அனுபவப் பாடங்கள் வாழ்வில் முதலீடாய்!
தவறிழைத்துத் திருந்தி வாழ்ந்தோரும் உண்டு!
திருந்த விரும்பாமல் தவறிழைப்போர் பலருண்டு!
மூலதனமாய் சேர்ந்திடும் காலத்தின் பாடங்கள்!
பாடங்களின் படிப்பினையால் வெற்றித் தடங்கள்!

கற்ற பாடங்களால் நாளைய மாற்றங்கள்!
திரும்பாது எப்போதும் கரைகின்ற காலம்!
விரயம் செய்யாமல் செயலாற்றல் நன்றாகும்!
பிற்காலத் தலைமுறைகள் பயனடையும் வகையில்
நற்செயல்கள் நறுமணமாய் நிலைத்திருக்கும் வாழ்வில்!

வறியவரோ, பேரரசோ காலத்தின் முன்னே
சிறுசிறு துகள்கள்தாம்! ஒவ்வொரு துகளுக்குள்ளும்
ஒரு கதை ஒளிந்திருக்கும்! இளமையும் முதுமையும்
காலத்தின் பக்கங்களில் வாழ்வியல் கணக்குகளாய்!
வீசுகின்ற காற்றும், கடந்த காலங்களில்
பேசிய கதைகளைச் சுமந்தே செல்கிறது!

இன்றுநாம் பதிக்கும் காலடிச் சுவடுகள்
அடுத்தடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் தடங்கள்!
காலத்தின் சுவடுகளாய் கடந்துபோன தடங்கள்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

காதலைச் சொல்ல காத்திருக்கும்
இரு மேகங்கள்
காதலைச் சொன்னதும்,
இடி மின்னலும்
சரணங்கள் வாசிக்க,
பறவைகளும் இசை பாட,
மரங்களோ அதற்கு நடனம் ஆட,
இந்த இசை நடனத்திற்கு பரிசாக
மழைத்துளிகள் மண்ணிற்கு
முத்தமிடுகின்றன.



கவிஞர் சி. லதா

ஏற்றமும் இறக்கமும்
இல்லாத இடம்
மாற்றம் இல்லாத
பயணத்தின் பாதை

அதே ஆறடிதான்
ஆற்றங்கரையோரம்..
எரிப்பதும் புதைப்பதும்
அவரவர் விருப்பம்

மிஞ்சுவது என்பது
மண்ணுக்கு இரையே



கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

பண்பான வாழ்வு

வான்மழை பூமிக்கு
அமுதமாய் பொழிந்திடும்..
பூமியெல்லாம் உயிர்பெற்று
சொர்க்கமாய் மாறிடும்.

இயற்கையின் செயல்கள்தான்
என்னாலும் அதிசயம்தான்.
இயல்பாய் நடந்திடும்
இறைவனின் கொடைதான்.

வாழும் காலம் யாவுமே
மனிதனும் அப்படியே.
கொடையான குணம் கொண்டு
சுற்றத்தை நேசித்தால்
சொர்க்கமாய் மாறிடுமே.

என்னாலும் இன்பம்தான்
"அறமான வாழ்வுதான்"
பூமியிலே புகழோடு
இனிமையான வாழ்வுதனை
எந்நாளும் படைத்திடுவோம்.

வாழும் காலம் வரலாறாய்
வருங்காலத் தலைமுறைக்கு.
பண்பான வாழ்வுதனைப்
பயனோடு அளித்திடுவோம்.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

எளிது
அரிதானது
நேரங்களின்
வறட்சியில்
அரிது
எளிதானது
நேரங்களின்
பயிற்சியில்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

மலர்மாலை சூடிக் கொடுத்த சுடர்கொடி!
பாமாலை பாடிக் கொடுத்த பூங்கொடி!
வண்டாடும் அரங்கத்து பொற்கொடி!
ஆண்டானை ஆளும் ஆண்டாளே அவள்



ஏனிந்த நிலையோ?



நித்தம் நித்தம் உன் நினைவு தான்
நிமிடமோ நொடியோ
எந்நேரமும் நின் நினைவுதான்

ஆழ் மனதில் உன் நினைவை அமிழ்த்தி
என்னுள் ஐக்கியமாக்கி விட்டேனே.
நிதமும் உன்னுடன்
உரையாடி கொண்டு தானே இருக்கிறேன்.

ஆனால் இன்று இந்த நொடி
ஏனோ மனதில்
உன் நினைவு
அதிகமாக வாட்டுகிறது.

நீ பேசிய வார்த்தைகளும்
நீ காட்டிய அன்பும் - அதைவிட
நீ கொண்ட அக்கறையும்தானே
என்னை சுவாசிக்க
வைத்துக்கொண்டு இருக்கிறது.

இன்று சுவாசமே திணறுகிறது
நின் நினைவால்.

மரணம் பிரித்தது தேகத்தை தானே.
மனதால் உன்னுடன்
வாழ்ந்து கொண்டு தானே இருக்கிறேன்.

இருப்பினும் ஏன் எனக்கு இந்நிலை.
விழி மூடினாலும் விழி திறந்தாலும்
உன் பிம்பமும் உன் உணர்வையும்
உணர்கிறேன் தானே.

பின் ஏன் இந்த நிலை.

நானே உனக்கு பேரழகி.
இன்று விழி நீர் வடிகிறது.
நின் ரசிக்கும் விழிகளை காணாது.
நினைவுகள்தான் வாழ்வென்ற
நிதர்சனம் புரிந்தாலும்
நின் தேகத்தை தேடுகிறது
உள்ளம்.

நீ இல்லாத இந்த வாழ்க்கை
துடுப்பில்லாத படகாய் தத்தளிக்கிறது மாமா.

விழி நீர் வடிகாலாக வரிகள்

கவிஞர் சுமதி தசரதன்

காத்திருப்பேன்



காத்திருப்பேன் உனக்குக்
காலங்கள் கடந்தும்
நரைமுடி கண்டபோதும்
காத்திருப்பேன் உனக்கு!

காலங்கள் தந்திட்ட
கசப்பான வலிகள்
கற்றுத் தந்தது
இதுதான் வாழ்வென!

என் மூச்சு
உடலைவிட்டுப் போகும் வரை
காதலுடன் காலமெல்லாம்
காத்திருப்பேன் உனக்காக!

வலிகள் ஒன்றும் பெரிதல்ல
வலிக்கச் செய்தவர் யார்?
யாராக இருந்தாலும் தாங்கிட
யார் அவர் என நான் அறிந்த வேளை
வலித்தது!

காத்திருப்பும் பாடம் புகட்டத் தவறவில்லை
பார்த்திருந்தேன் நீயும் வருவாயென
காத்திருப்பில் ஓர் உண்மை நிதர்சனமானது
பொறுமையும் மனிதனுக்கு அவசியமென!

வாடகைக்கு எடுத்த உடம்பு
வாசலைவிட்டுப் போகும் வரை
காத்திருந்தேன் உனக்கு!

உடலோடு வாழும்வரை.
உயிரோ உடலை நினைப்பதில்லை
செல்லவேண்டிய தூரம் வந்ததும்
சொல்லும் கதைகள் பல
காத்திருப்பேன் கதைகள் கேட்டிட!

கவிஞர் திருமதி. ஜாவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

தவிப்பு



தினம் பேசிய அழைப்புகளைத்
திரும்பத் திரும்பத் தேடுகிறேன்;
தந்த பதில்களின் வரிகளுக்குள்
தொலைந்த உன்னைத் தேடுகிறேன்.

நேற்றைய நொடிகள் நெஞ்சுக்குள்
நிழலாக வந்து நிற்கின்றன;
நினைத்திடும் போதெல்லாம்
நிசப்தம் மட்டும் பேசுகின்றன.

சொல்லிய சொற்கள் சிதைந்தாலும்,
சொல்லாத உணர்வு சாகவில்லை;
முடிந்த உரையாடல் மௌனமானாலும்,
மனத்தின் உரையாடல் முடியவில்லை.

காத்திருந்த கணங்கள் காயமாய்,
கடந்த நினைவுகள் கனமாய்,
வருவாயோ என்ற ஏக்கம் உயிராய்,
வரமாட்டாயோ என்ற அச்சம் நிழலாய்!

தொலைந்தது நீயா?
தொலைந்தது நானா?
தொடர்புகள் துண்டிக்கப்பட்டாலும்,
தவிப்பு மட்டும் தொடர்கிறது.

நீ இல்லாத இரவுகள் நீள்கின்றன,
நினைவுகள் மட்டும் விழித்திருக்கின்றன;
மறக்க முயலும் ஒவ்வொரு நொடியும்,
மீண்டும் உன்னையே நினைவூட்டுகின்றன.

இது காதலின் காயமா?
இல்லை...
காதலித்த மனம்
காணாமல் போனதன் தவிப்பா?

கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு (இலங்கை)

நட்பு

நட்பென்பது சொல் அல்ல,
அது ஒரு சொந்தம்!

நட்பென்பது உறவல்ல,
அது ஒரு உயிர் பந்தம்.

ரத்தம் இல்லாமல் உருவான உறவு இது,
வரம் கேட்காமல் கிடைத்த வரம் இது;
முகம் பார்த்துப் பழகுவது அல்ல,
மனம் பார்த்து வாழ்வது இது.

சிரிக்கும்போது கூட இருக்கும்,
அழும்போது தோள் கொடுக்கும்,
விழும்போது தூக்கி விடும்,
வழி தவறினால் திருத்தி விடும்.

கணக்கு பார்க்காத கணக்கு இது,
கண்ணீரைத் துடைக்கும் கைக்குட்டை இது;
பேசாமல் இருந்தாலும் புரிந்துகொள்ளும்,
பேசித் தீர்த்தாலும் தீராத அன்பு இது.

பால்யத்தில் தொடங்கி,
பருவத்தில் வளர்ந்து,
முதுமை வரை தொடரும்
ஒரே சொந்தம் நட்பு மட்டுமே.

உயிர் போனாலும்
உறவு போகாது,
அதுதான் நட்பு!



கவிஞர் நஸ்ரினா, குருநாகல் (இலங்கை)

விநாயகர்

ஏழு நாட்கள் பூஜிக்கப்பட்ட
விநாயகர் சிலைகள்
கடைசியில் கழிவுகளாய்

முழுமுதற் கடவுள்
கடற்கரையில் பிய்த்து
எறியப்பட்ட வேதனைகளாய்

மாலை மரியாதையுடன்
கம்பீரமாய் இருந்த கடவுள்
நீர்நிலைகளில் ஊனமாய்

ஊர்வலமாய் சென்ற
நாயகனின் சிலைகள்
கடைசியில் காயங்களாய்

பக்தர்கள் கையேடுத்துக்
கும்பிட்ட விநாயகர்
கடைசியில் குப்பைகளாய்

வேதனையில் வெம்புகிறோம்
காப்பாற்றுங்கள் எங்கள்
நாயகனை விநாயகனை



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி



எல்லாப் பிரார்த்தனைகளுக்கும்
அன்னையின் சாயல்!

அவளருளால்
உயிர் பெறுகின்றன
பிரார்த்தனைகள்.

இறுதிவரை நோகாமல்
இளகிக்கொண்டிருக்கும்
கருணைக்கடல் அவள்.

அவள்
உச்சி முதல் பாதம் வரை
சொர்க்கங்களே!

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

இதுவே போதும்

அன்பே! வருணனை வார்த்தை தேவைமில்லை
பெண்களை மதிக்கும் குணம் வேண்டும்
நிலம், நீர், கடவுள் பெண்களென
உவமைகள் தேவையில்லை, மெய்யன்பே வேண்டும்
பெண்ணின் உணர்வுகளை அறிந்தால் போதும்
பொன்னால் பெண்களை அலங்கரித்தல் வேண்டாம்
அவள் புன்னகை ரசனை போதுமே
ஒளிரும் ரத்தினங்களாய் உயர்த்தவும் வேண்டாம்
அவள் உண்மை நிலை அறிந்தால் போதும்
ஆடை அணிகலனால் பூட்டவும் வேண்டாம்

அவள் பிடித்த ஆடை அனுமதி வேண்டும்
அவளுக்குச் சேவைகள் தரவேண்டாம்
அவள் தேவைகள் நிறைவேற்றப் போதும்
விரல்களில் மோதிரம் மின்னவும் வேண்டாம்
விரல்களைக் கோர்த்து வாழ்தலே வேண்டும்
தலைக்கீரிடம் சூடி ராணியாக்க வேண்டாம்
நம்பிக்கை கலைக்காத நாணயம் போதும்
மேடையில் ஏற்றிப் போற்றவும் வேண்டாம்
அவள் மேன்மை குலைக்காத நிலைபோதும்
மற்றவர் முன்னால் பாராட்டுரை வேண்டாம்

அவள் மனமறிந்து நடத்தல் போதும்
பாவனை, ஒப்பனை எதுவும் வேண்டாம்
பாசம், நேசம், பண்பே போதும்
யாருடைய தேவைக்கும் பயன்பட வேண்டாம்
உண்மைப் பண்பில் உயர்ந்தாலே போதும்
எங்களைத் தூக்கி வைக்கவும் வேண்டாம்
தாழ்த்தி அமர்த்தும் அடிமையும் வேண்டாம்
தாக்காமல் அன்புடன் காத்தலே போதும்
கண்ணுக்குக் கண்ணாய் பார்க்கவும் வேண்டாம்
பெண்மை போற்றி வாழ்வதே போதும்



கவிஞர் ரெஜினா பானு, மேலூர்

காதல் என்னவென்று
நீ அறிய விரும்பினால்
காதல் கொள்ளாமல் காலம் கடத்து
கண்டவர்களின் காட்சிகள்
காலம் சொல்லும்
உன் மன காதல் வெல்லும்
அன்று!



கவிஞர் ம. செல்லா, நூத்தப்பூர்



பாவையின் பார்வையில்
பரவசம் உண்டாகுதே!
பனித்துளியாய் உருகியே
உள்ளமும் குளிர்கிறதே!

காந்தமாய் ஈர்த்திட்டாள்,
கனிவானேன் நானும்.
மயக்கம் தந்தாள்,
மாறியது நெஞ்சம்.

தஞ்சமானேன் அவளிடம்
வஞ்சமில்லாத அன்பினிலே!
கொஞ்சும் கிளியவள்,
கோவைப்பழ இதழவள்.

தேனூறும் அதரத்தவள்,
தேவதை வம்சமிவள்.
விலகிட எண்ணமில்லை
வித்தகியின் அரவணைப்பிலே!

வாசமுல்லை தேன்கிள்ளையான
வாடாமலர் வஞ்சியவள்.
அவளிடம் சரணடைந்தேன்
மீண்டிட இயலாமல்!

என்னவள் அவளே,
எண்ணத்தில் நிறைந்திட்டவளே.
தடாகத்துத் தாமரையவள்,
தளிருடன் மேனியவள்.

ஆனந்தத்தின் எல்லையவள்,
ஆர்பாட்டம் இல்லாதவள்.
இதயத்தின் ஓசையாய்
இதமான துடிப்பானவள்.

ஏந்திழையின் வசமிழந்தேன்,
ஏக்கமது என்னுள் இல்லை.
வாழ்வில் தேவை பாவை பார்வையே!

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

நாம் மாறினால் நாடு மாறும்



எண்ணத்துத் தூய்மையே செயலும் நேர்மையே
நல்ல தலைமுறைதானே மலருமே
சிறுதுளி சேர்ந்தாலே கடலே
நம் முயற்சி சேர்ந்தாலே வெற்றியே!

மாற்றம் வேண்டும் என்ற நினைவிலே
மற்றவரை நோக்காமலே நாம் மாறுவோமே
இருள்வழியே போயிருந்த காலங்களே
இனிதே விழிக்கவே தோன்றும் நல்ல வழியே!

சாதிமதப் பிரிவினைகளின் வெறியான ஆட்டமே
சச்சரவு வேண்டாமே ஒற்றுமை சேருமே
விழிப்புற்ற நெஞ்சினிலே சுயநலமும் மடியுமே
வீணான கோபங்கள் காற்றினில் கரையுமே!

ஒற்றுமையின் பலத்தினால் உலகமே மாறுமே
மனிதமே மாண்பென்றே இணைந்து வாழவே
மாற்றிடுவோம் நல்ல சரித்திரம் படைப்போமே!

கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருதுநகர்



ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
ஒளவை பகர்ந்ததை
ஆள்வதலாலே உயர்வு.

கொண்ட செல்வத்தைக்
கொடுக்கப் பழகு.
கொடை வழங்கியோர்
கொடுப்பதில் உயர்ந்தோரன்றோ?

நாட்டை உய்த்திட
நானிலம் வளர்ந்திட
நாளைகளைச் செழுத்திட
நாநயம் போற்றிடு.

அளவுக்கதிகமாய் ஆசைப்படுவதுமே
அறத்தின் தீமையன்றோ?
அன்பின் முனைப்பாய்
அள்ளி வழங்கிடு.

பொறாமை உள்ளம்
பொறுத்தார்க்கு இல்லையே!
பொங்கும் இன்பமே
பொன்னின் குணத்திலேயே!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

மழைக்குப் பிந்திய இரவானது
அவ்வளவு மகோன்னதமானது!
முழுமூச்சாய் பெய்த மழையில்
ஒரு குழந்தையைப் போல
குதூகலத்துடன் நனைந்து கிடந்து
ஊறிய பாதங்களை
அப்படியே உலர்த்தாமல்
செல்லமாய் தலை சிலுப்பியதும்
தெறித்துப் பரவும்
மழைத்துளியின் ஈரம் ஏந்தும்
சுவற்றின் வாசம் சுவைத்து
கனமாய் ஊடுருவும்
குளிரின் கதகதைப்பைக் கவ்விக்கொண்டு
நட்டுவாங்கம் சொல்லாத ஜதியில்
உன் கால்கள் நடனமிடும்
அந்தக் கொள்ளை இரவு
எப்போது வருமென்ற ஏக்கத்தை
இன்றும் என்னுள் கடத்துவதை
நீ அறிவாயா ஆனந்தமே...?

மகோன்னத இரவின் மகிமை
மகோன்னதமான மனிதர் மட்டுமே அறிவர்!
நான் உன்னால் மகிமை பெற்ற மாமனிதன்!
பிறகு எனக்கேன் இல்லை
அந்த மகோன்னதம்?

சில பொய்கள் சுடும்
சில பொய்கள் சுட்ட பின் கெடும்!
நான் உன்னால் கெட்ட
உருப்படாதவன் என்பதை
உன்னிடம் எப்படிச் சொல்வேன்?
இந்தப் பொய்யும் அழகானது
உயிரே உன்னால்தானே.



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்



இன்றைக்காவது
நல்ல மேய்ச்சல் நிலத்திற்குக் கொண்டுபோய்
இந்த ஆடுகளுக்கு வயிறாரத்
தீனி கிடைக்க வேண்டும்.

சிவப்பும் வெள்ளையும் கலந்த
அதுதான் எங்காவது போய்விடும்.
அதன்மீது ஒரு கண் எப்போதும் தேவை.

அவை மேய்கையில் நான் ஒதுங்க
எனக்கு ஒரு நிழல் தேவை.

மேய்ந்தபின் குடிப்பதற்கு
நல்ல நீர்நிலை அருகில் இருக்குமா?

மொத்தம் வந்தது
முப்பத்திரண்டு என்பதை மறக்கக்கூடாது.
சினை ஆடுகள் மூன்று
பட்டியிலேயே உறங்குகின்றன.
நான் போவதற்குள் ஈனக் கூடாது.

அடுத்த சந்தையில் மூன்று உருப்படிகளை
நல்ல விலைக்கு விற்றுப் பேத்திக்குத்
தாவணியும் பேரனுக்குக் கிரிக்கெட் மட்டையும்
வாங்க வேண்டும்.

கவிஞர் வளவ. துரையன்

பன்னிரு ஆழ்வார்களில் இறுதியில் வருபவர்;
பாடிய பாசுரங்களோ ஆயிரத்து நூற்று
முப்பத்து நான்காமதில் "பெரிய திருமொழி"யில்
முகந்தனின் பெருமையை ஆயிரத்து நூற்று
நான்குப் பாசுரங்களில் எடுத்து இயம்பினாரே!

பஞ்ச சமஸ்காரம் செய்த வைஷ்ணவரையே
அஞ்சாது கரம்பிடிப்பேன் என்ற தேவலோக
குமுதவல்லியைக் காதலாலே கரம்பிடிக்க வைணவரானார்;
குறிக்கோளாய் வைணவத்திலவர் கொண்டதோ ஒருநாளைக்கு
ஆயிரத்தெட்டு வைணவர்க்கு அன்னதானம் செய்வதையே!

அன்னதானம் தொடர்ந்திட கள்வரும் ஆனார்;
ஆட்கள் காடுவழி செல்கையிலே கொள்ளையடித்தார்;
காட்சி கொடுத்தார் நாரணரும் காட்டினிலவர்க்கு;
காதினிலுரைத்தார் தன்நாமத்தை தீட்சையாய் அவர்க்கே;
கேட்டவர் கண்டார் கருடவாகனனை விண்ணிலே!





ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி உலகமனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும் தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்தாள் அணைவீர்! தக்க கீர்த்தி அருமறையின் திரள்நான்கும் வேள்வி ஐந்தும் அங்கங்கள் அவை ஆறும், இசைகள் ஏழும் தெருவில் மலிவிழா வளமும் சிறக்கும் காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே!

சோழனின் படைத்தளபதியாய் அவராற்றிய பெரும்பணியால்
சோழனவரை திருமங்கை நாட்டின் அரசனாக்கினான்;
"ஆடல்மா" குதிரை ஏறியவர் போர்க்களத்தில்
அயலவரை புறமுதுகு காட்டச் செய்தாரவருக்கு
நீலனியற்பெயர்; பரகாலன் பலசிறப்புப் பெயரிலொன்றே!

நாராயணா என்ற திருநாமம் தந்திடும்
நன்மைகளைப் பட்டியலிட்ட பாசுரங்கள் தந்தவரிவர்;
நின்றவூர் பெருமாளிவர் பாசுரங்கள் வேண்டி
நடையாய் நடந்தாரென்பது நாமறிந்த வரலாறு;
நாமுமிவர் திருவடிப்போற்ற நாரணனும் அருள்வானே!

நான்குவரியில் இராமகாதை நவின்றநற்றமிழ் வித்தகரிவர்;
நற்றமிழ் ஞானசம்பந்தர் போற்றும் வண்ணம்
கணிதவெண்களால் எண்ணலங்காரப் பாசுரமதைப் பாடிக்காட்ட
கேட்டுமகிழ்ந்த ஞானசம்பந்தரும் வேலாயுதமொன்றை அவர்க்குக்
கொடுத்தாரெனில் அவர்பெருமை உரைக்கவல்லார் நம்மிடையில்லை!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

வெல்வது யார்க்கும் எளிது
தோற்பதுதான் அரிது.
தோற்றவன் வெற்றிபெற்றவன்
ஆட மாட்டான்.
புதிதாக வசதி வந்தவன்போல்.

பெற்றோரிடம் தோற்பது பேரின்பம்.
உறவுகளிடம் தோற்பது உயரின்பம்
நட்பிடம் தோற்பது நல்ல இன்பம் தோழி!
உன்னிடம் தோற்பது தொடர் இன்பம்.

அன்பிடம் அன்பு தோற்றது
அவ்வளவுதான்.
அறிவிடம் அறிவு தோற்றது
அவ்வளவுதான்.
பகல் இருளிடம் தோற்பது
அஸ்தமனத்திற்கு.
இருள் பகலிடம் தோற்பது
விடியலுக்கு.
உன்னிடம் நான் தோற்பது
அன்பிற்கு.

பூவைப் பறிப்பதற்குப் பதில் காற்று
கோபத்தில் அவசரப்பட்டு
வண்ணத்துப்பூச்சியை பிடித்ததற்காக
கருணை வேண்டி வண்ணத்துப்பூச்சியிடம்
கையேந்துவது தோல்வி அல்ல.
காற்றின் கறைபடியாத நட்பு.

பரவாயில்லை,
பார்த்துக்கொள்ளலாம்,



புரிந்துகொள்ளவில்லை,
என்ற மூன்று வார்த்தைகளிலும்
சொல்லவும் முடியாமலும்,
நட்பின் நினைவுகளை
கொல்லமுடியாமலும்,
பதுங்கிகிடக்கின்றன.
சில துக்கங்களும்.
காயங்களும்
வெளிப்படையாக நட்பை பற்றி
பேசமுடியாமல்.
அதுவும் தோல்வியல்ல.
மறுபடியும் நட்பின் பயணம்
தொடருமா என்ற கேள்வியே.

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

தீராத காதல்

நண்பர்களுடன் சேர்ந்து
பயணிப்பது
யாவருக்கும்
கிடைக்காத சொர்க்கம்!

கண் கலங்கினால்
கண்ணீர் துடைக்க
கரமாய் வந்தவர்கள்!

முகத்தில் சிறிது அளவு
மாற்றம் கண்டாலே
மனதளவு பதறுவார்கள்!

உணவை உண்ண மறுத்தால்
ஊட்டி விடவும் தயங்கமாட்டார்கள்!

நீங்கள் எல்லாம்
என் வாழ்வில் ஒளிர
நான் என்ன தவம் செய்தேனோ!



கவிஞர் மா. மோனிஷா

ஏக்கமாய் இன்றும் என்றும்

எதிர்ப்பார்ப்பு காத்திருப்பு
ஒரு கணம் விலகியும்
கணத்த அகத்தோடு அலையும் நான்

எந்த ஆரவரமும் இல்லா நிலையில்
அவன்
நானாக நானாக
எனக்கு எதுவும் வேண்டுமாயின்
நானாக அதரம் மொழிந்தே
பெற வேண்டுமாயின்

கடந்திட வழியின்றி அகத்தோடு
பிடிவாதமாய் பிடித்து வைத்து கதற
செவி மூடிய அவனி இது

எவரது செவிக்கும் அதரம்
மொழிதலே எட்டாத போது
வாய்மொழியா ஒரு ஏக்கம்
எப்படி புரியும் தானே.

தவறு ஒவ்வொன்றும் அவளுடையதாகவே
அதே ஏக்கத்தில் மீண்டும்
கரம் பிடித்தமாய்
எந்த ஓர் ஆரவாரமும் இன்றியே

இன்றும்
வறுத்தமாய் தேற்றுகிறாள்
என்றும் போல அவளுக்காக அவளே
தனக்காக கரம் பிடித்தாய்



பிடிவாதமின்றி பிடித்தே இருந்திடு
வாழ்நாள் முழுதும்.
எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்ய
அவனில்லை உனக்கு.

என்று அவளே தேற்றி நிசப்தமில்லாது
நிம்மதி தேடி இரவொன்றை தேடி
அனுதினமும் ஓட.

அப்பப்போ சிறிது வலி அதிகமாய்
தூக்கி வீச
உடைந்தும் எழுந்தே நிற்கிறாள்.
என்று வரை
கேள்விகளுடன்.

கவிஞர் ச. கார்த்திகா, பழநி

ஏக்கமாய் இன்றும் என்றும்



எதிர்ப்பார்ப்பு காத்திருப்பு
ஒரு கணம் விலகியும்
கணத்த அகத்தோடு அலையும் நான்

எந்த ஆரவரமும் இல்லா நிலையில்
அவன்
நானாக நானாக
எனக்கு எதுவும் வேண்டுமாயின்
நானாக அதரம் மொழிந்தே
பெற வேண்டுமாயின்

கடந்திட வழியின்றி அகத்தோடு
பிடிவாதமாய் பிடித்து வைத்து கதற
செவி மூடிய அவனி இது

எவரது செவிக்கும் அதரம்
மொழிதலே எட்டாத போது
வாய்மொழியா ஒரு ஏக்கம்
எப்படி புரியும் தானே.

தவறு ஒவ்வொன்றும் அவளுடையதாகவே
அதே ஏக்கத்தில் மீண்டும்
கரம் பிடித்தமாய்
எந்த ஓர் ஆரவாரமும் இன்றியே

இன்றும்
வறுத்தமாய் தேற்றுகிறாள்
என்றும் போல அவளுக்காக அவளே
தனக்காக கரம் பிடித்தாய்

பிடிவாதமின்றி பிடித்தே இருந்திடு
வாழ்நாள் முழுதும்.

எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்ய
அவனில்லை உனக்கு.

என்று அவளே தேற்றி நிசப்தமில்லாது
நிம்மதி தேடி இரவொன்றை தேடி
அனுதினமும் ஓட.

அப்பப்போ சிறிது வலி அதிகமாய்
தூக்கி வீச
உடைந்தும் எழுந்தே நிற்கிறாள்.
என்று வரை
கேள்விகளுடன்.

கவிஞர் ச. கார்த்திகா, பழநி

தமிழ்

அன்னை தமிழே ! அழகுத்தமிழே !
அன்புத்தமிழே ! அறிவுத்தமிழே !
அரவணைக்கும் தமிழே ! ஆறுதல் தரும் தமிழே !
உன் மொழியே என் மூச்சு

உன் பாதமே நான் தோலும் கோயில்
இது என் இதயம் திறக்கும் வாயில்
உன் தாய் தமிழே என் வீட்டின் நுழைவாயில்
எத்தனை காவியங்கள்
என் மனதில் பதிந்தது ஓவியமாய்

கம்ப ராமாயணம், திருக்குறள்,அகநானூறு
புறநானுறு ,சீவக சிந்தாமணி , சிலப்பதிகாரம்
இன்னும் எத்தனையோ புகழ் தரும் தமிழ் படைப்புகள்

பாரதியின் புதுமை கவிதைகள்
பாரதிதாசனின் புரட்சி வரிகள்
கண்ணதாசனின் கன்னித் தமிழ்
பட்டுக்கோட்டையாரின் பண்புத்தமிழ்
வைரமுத்துவின் வைர வரிகள்
ஹய்க்கூ கவிதையின் கவிநயம்
இவை அனைத்தும் தமிழ்த்தாயின் அணிகலன்

தமிழ்த்தாயே உலகெங்கும் உன் புகழ்
உன்னால் புவியெங்கும் பெருமை
உனை பணிதல் என் கடமை
உயிருள்ளவரை உன்னால் இனிமை
தமிழால் நான் பெற்றேன் புலமை
உலகம் உள்ளவரை உன் தமிழும் வாழும்



கவிஞர் லலிதா ஷியாம், மதுரை

அடிமையின் விலங்கொடிக்க அன்பையே விதைத்தவர்
கடமையின் வழிநின்று கருத்தினை வளர்த்தவர்
வன்முறைப் பாதை துறந்த வழிகாட்டி
தன்முனைப் பயணத்தில் பாதையான ஒளியூட்டி
எளிமையின் தோள்களில் தேசத்தைச் சுமந்தவர்
வளியென மக்களின் வாழ்வில் கலந்தவர்
நடையின் வேகத்தில் நாட்டை அளந்தவர்
படையெனும் மக்களை பண்பாட்டில் காத்தவர்
எதிரியின் இதயத்தில் கருணையால் நுழைந்தவர்
உதிரியாய்க் கிடந்தோரை உயரத்தில் ஏற்றியவர்
பதவியை நாடாது மக்களிடம் கலந்தவர்
உதவியென வருவோரை உயிரெனக் காத்தவர்
வலியோரும் எளியோரும் சமமெனக் கொண்டவர்
வலிமையின் ஆதிக்கத்தை வளராது தடுத்தவர்
இனத்தால் பேதமெனில் வேரறுக்கத் துணிந்தவர்
மனத்தால் சமமென்றே மக்களுக்கு உரைத்தவர்
அன்னிய ஆதிக்கத்தை அடியோடு வெறுத்தவர்
அன்னியரை வெறுக்காது அன்பையே நீட்டியவர்
விடுதலையின் வேள்வியில் தன்னையே கரைத்தவர்
சுடும்போதும் எதிரிக்கு மன்னிப்பை நிறைத்தவர்
தடுத்தாலும் நில்லாத தாயன்பில் நிறைந்தவர்
அடுத்த தலைமுறைக்கும் அன்பையே காட்டியவர்



கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

வானம் எனக்குச் சொந்தமில்லை - இந்த
வட்டக் கம்பிகளே என் எல்லை !
காற்றைக் கிழித்த என் சிறகுகள் - இன்று
கூட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றன !

பழங்கள் எனக்குப் பஞ்சமில்லை - ஆனால்
பறக்கும் சுகத்திற்கு ஈடில்லை !
பசிக்கு உணவிடும் மனிதர்களே - என்
சுதந்திரப் பசியை அறிவீரோ ?

கிளைக்குக் கிளை தாவிய காலங்கள் - வெறும்
கனவாக மட்டுமே கலைகின்றன !
கூட்டைக் கடந்து நான் பாடினாலும் - அது
பாட்டல்ல , என் கண்ணீர்க் கவிதை !



என்னிடம் இருக்கின்றன
வண்ணமயமான சிறகுகள்,
பறப்பதற்கான ஆற்றல்,
உயரங்களைத் தொடுவதற்கான கனவுகள்.

அடைத்து வைத்து அன்பு செய்யாதே,
என் ஆகாயத்தை என்னிடம் திருப்பித் தா !
கூண்டைத் திறந்து விட்டு ஒரு முறை பார்,
உன் அன்பையும் சுமந்தே பறப்பேன் நான் !

கூண்டுக்கு வெளியே
காற்றின் ராகம் கேட்கிறது.
என் சிறகுகளோ
சுதந்திரத்தின் சுவடு தெரியாமல்
வலியால் துடிக்கிறது.

சிறகை விரித்து நான் பறக்க - ஒரு
சிறு வழி காட்ட மாட்டாயா ?
மனிதனே, என் சிறையைத் திறந்து - என்னை
வானத்தில் வாழ விட மாட்டாயா ?

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

கிளைகளின் மடியில் துயின்ற நிலையில்
கலைத்து வீழ்த்தியது காற்றின் கரங்கள்!
பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறத்திற்கு
கச்சிதமாய் எனை மாற்றியது காலம்!
தலையாட்டி விளையாடிய காலம் மாறி
இலையுதிர் காலத்தின் ஏலாமையை ஏற்று
தரையை முத்தமிடும் தவத்தில் வீழ்ந்தேன்!
மரத்தின் பெருமையைச் சுமந்த தேகம்
மண்ணோடு மண்ணாகும் பயணத்தில் வீழும்!
உயிர்கொடுத்த வேர்களுக்கு உரமாக மாறி
உரைத்திடுவேன் நன்றி உணர்வினை நானும்!
இலைகள் உதிர்ந்தாலும் மரங்கள் நின்றிருக்கும்!
இளமை என்றும் நிலையாக இருப்பதில்லை!
காலமாற்றத்தில் அனைவரின் கோலங்கள் மாறும்!
எல்லோர்க்கும் முதுமை வந்தே தீரும்!
வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களை முதுமையில்
வாடாமல் காப்பது தலையாய கடனென்று
உணர்வீர் மானிடரே! உதிர்ந்த இலை
உணர்த்தும் உன்னதத் தத்துவத்தை ஏற்போமே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி



முக்காலமும் ஓடிடும் முடிவில்லா நீரும்
ஊக்கிகள் மூலமாய் ஊர்ந்திடும் வடிவமைப்பே
சலனமின்றி ஓடிம் சாக்கடை நீரை
மெல்லின நண்பராய் மெழுகாய் பார்ப்பீரே

வீட்டின் கழிவுகள் வீதியெங்கும் பரவி
நாட்டின் நலனை நாளும் பாதிக்குதே
சாக்கடைத் தேங்காமல் சாதனைப் புரியவே
முக்காலமும் போராடுமே முழுதானத் திட்டத்தால்

வெள்ளம் பெருகிடும் வெற்றி உருவாய்
தள்ளிடும் வீட்டின் தரமில்லாக் குப்பைகளை
மனிதக் கழிவுகளை மண்ணில் தெளிக்கும்நல்
மனமில்லா மாந்தரின் மட்டில்லா பண்பே

அரசாங்கம் பல்வித அர்த்த அறிவிப்பை
உரமாய் அளித்தாலும் உள்ளமும் ஏற்பதில்லை
நித்தம் கொடுமைகள் நிசப்தமாய் ஏற்று
சத்தம் இன்றியே சலிப்பின்றிச் செல்லுதே

அடைப்புகள் ஏற்படும் அவ்வப்போது ஊற்றாய்
துடைக்க வருபவரே துணிச்சலான பணியாளர்
பொங்கிடும் ஊற்றாய் பொதுவழியில் அசிங்கமாய்
ஏங்கிடும் வரமாய் என்றைக்குத் தீருமோ
தெருவில் கொட்டிடும் தேவையற்ற கழிவுகளும்
உருவில் பெருகி உருவாகும் கொசுக்களுமே
தேவையான இடத்தில் தேடிடும் வண்டியில்
சுவைமலர் உணர்வாய் காத்திருந்துத் தருவோமே

நெகிழிப் பொருட்களை நித்தம் தவிர்த்தால்
புகழுமே தினமும் புத்தம்புதுக் கால்வாயும்
பாசிகள் படியாமல் பாதுகாப்பாய் ஓடினால்
நேசமாய் நெஞ்சில் நித்தம் ஆனந்தமே

மக்கள் வாழ்வே மகத்துவ நிறைவாய்
எக்காலமும் நிறைந்த என்னுயிர் உறவுகளே
சக்கரமாய்ச் சுழலுவேனே சமுத்திரம் வரையில்
உக்கிர வெயிலிலும் உழலுரேனே உண்மையாய்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

அலையோசை ஆரவாரிக்கும் - என்
மனசோடு மாலை மயங்கும்
கடல் அலையும் மணல் நுரையும்
கொஞ்சும் வேளையில்
நிகழ்காலம் நினைவூட்டுது மெல்ல

எண்ணங்களோ ஆழ்மனதில்
சொல்கிறதே என்னென்னவோ
நொடிப்பொழுதின் பார்வையிலே
நூறாயிரம் பாஷைகள் ஒன்றானது

விழியோரக் கவிதையாலே - உனை
வரைந்து விட்டேன் ஓவியமாய்
தடம் பார்க்கும் இடமெல்லாம்
எனக்குள்ளே ஏதோ ஏதோ
நினைக்கும் வேளையில்
பிடிவாதமாய் மறுக்குது மனசு
கலக்கம் கொள்ள மயக்கம் மெல்ல
கனவுகளோடு இன்னும் கூடுது

காவியக் காதல் பாடுது
சிறகடித்து பறந்துவிட ஆசை வர -
சட்டெனவே நானும்
பறந்து விட்டேன்

மேகங்களெல்லாம் கூடி திரண்டு
இருகை நீட்டி வரவேற்க
என்னை நானும் புகுத்திக் கொண்டேன்

மேகமென்னும் ஆடையுடுத்தி - அதில்
நானோர் மங்கை என அறிந்தேன்
என்னைத் தொலைத்தேன் அதனுள்ளே



தொலைந்த என்னை மீட்டெடுக்க
யார் வருவார் நானறியேன்
இருவிழிகளின் தேடலில்...

தேடலின் பார்வையில்...
யாதுமாய்... நான்...

கவிஞர் மு. செந்தூர்கனி, முத்துகிருஷ்ணாபுரம், தூத்துக்குடி

இதயம் தேடி அலையும்
அந்த மொழி.
கேள்வி பார்வையின்றி
சண்டை பிடித்து
உரிமை கோரும்
அந்த உறவு.

அடித்தாலும் வலிக்காத
அந்த மொழிகள்.
கோபத்தைப் பொழிந்து
பேச ஒரு மாளிகை.
ஆனந்தத்தைப் பறக்க
விட விசாலமான கடற்கரை.

சோகத்தை சொல்லிச் சொல்லி ஆறுதல் பெற
அமைதியான பூங்கா.
கண்டதைக் கேட்டதை
நம்பகமாய் வாய்விட
ஓர் தனித்த தீவு.
ஒழிவு மறைவின்றி
எதையும் கொட்டித்தீர்க்க
ஓர் தேசம்.

அத்தனையையும் பொறுமையாய்க்
கேட்க அவள் வேறு யாரிந்தப் பூமியில்.
உன் வருகையில் இதயம்
உருகும் அந்த நிமிடங்கள்
உலகத்தில் நானுணர்ந்த
பொன்னான நேரம்.

உன் பார்வைக்கு நான்
அடங்கிக் கொள்கிறேன்.
உன் பேச்சில் உயிர் வாழ்கிறேன்.
என் விழிகள் மூடும் வரை
என்னோடு இருப்பாயா
என் அன்னையே.



கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ



உயிரற்றும்
உயிர்ப்பைச் சுமக்கிறது
நிழல்

அமைதியை
அசைத்துப் பார்க்கிறது
நினைவு

நிலாவிற்கு
ஒளி ஊட்டுகிறது
இரவு

இரவுக்குள்
உயிர் பிறக்கிறது
வெண்ணிலா

களைத்துப்போன நெஞ்சத்திற்கு
கணப்பொழுதில் ஆறுதல்
பயணம்

காலத்தைக்
காட்டித் தருகிறது
காலநிலை

தவிர்க்க முடியாத நேரத்திலும்
தவித்து நிற்கிறது
நேசம்

வாக்குறுதிகள்
வலுவிழக்கின்றன
துரோகம்

கனவு



பாஸ்மதி அரிசியில் பிரியாணி அல்ல எங்கள் கனவு
பட்டினியில்லா மூன்று வேளை உணவே எங்கள் கனவு
பாலாறும் தேனாறும் ஓட வேண்டும் என்பதல்ல எங்கள் கனவு
காவிரியில் தடையில்லா தண்ணீரே எங்கள் கனவு

பெண்களை தெய்வமாகவும் தேவதைகளாகவும்
போற்ற வேண்டும் என்பதல்ல எங்கள் கனவு
எங்களை சக மனுஷியாக சகோதரியாக காணுங்கள்
என்பதே எங்கள் கனவு

காமராஜரை போல் கக்கனை போல்
தன்னிகரற்ற தலைவர்கள் வேண்டும் என்பதல்ல எங்கள் கனவு
கண்ணியமான கடமை உணர்ச்சியுள்ள
தலைவர்கள் போதும் என்பதே எங்கள் கனவு

விவசாயிக்கு இலவச கடன் வழங்கி
அவனை அம்பானியாக்க வேண்டும் என்பதல்ல எங்கள் கனவு
உலகுக்கெல்லாம் உணவளிக்கும் விவசாயி
எலி மருந்து உட்கொள்ளும் அவலம் மாற வேண்டும்
என்பதே எங்கள் கனவு

மும்மொழி கொள்கைக்கு எதிரி ஆக வேண்டும்
என்பதல்ல எங்கள் கனவு
தாய் மொழிக்கு தலைமையிடம் வேண்டும்
என்பதே எங்கள் கனவு

அப்துல்கலாம் கனவு காணுங்கள் என்று
சொன்னதாலோ என்னவோ தமிழன் இன்னும்
அரை உறக்கத்திலேயே இருக்கின்றான்

உறங்கிக் கொண்டிருக்கும் தமிழன்
வீறுகொண்டு எழ வேண்டும் என்பதே
என் பெருங்கனவு

கவிஞர் பிரியதர்ஷினி, கறம்பக்குடி

அப்படின்னா அது
இப்படின்னா இது

முந்தைய
அவமானத்துக்கும்
வசைமொழிக்கும்
ஏளனத்துக்கும்
தோல்விக்கும்
இழப்புக்கும்
ஏமாற்றத்துக்கும்

எனக்கு மட்டும் ஏன்?
அந்தச் சூழ்நிலையால்
அவரால்
இது நடக்கவில்லை

அப்படின்னா
உணர்வுரீதியான
யோசிப்பு!

இந்தப் புரிதல் இல்லாமையால்
முன்தயாரிப்பு
இல்லாதது
செயல்பயணத்தை
முன்கூட்டியே ஊகிக்காதது
உரிய உழைப்பு
கொடுக்காதது
தேவையான
தகுதியை வளர்த்துக்கொள்ளாதது

இப்படின்னா
புத்திதீதியான
யோசிப்பு!

நீங்க மட்டும்தான்...



கடந்தவைகளின்
கசப்புகளும்
தோல்விகளும்

இன்றையவைகளின்
இழப்புகளும்
வேதனைகளும்

புத்தியை
ஆக்கிரமித்து

தூக்கமில்லா இரவுகளுக்குச்
வில்லானாய் மாற

கூடவே
நாளைய பற்றிப்
பயமும் பதட்ட
எண்ணம் வர

வாங்க, வாங்க...
நீங்க மட்டும்தான்
பாக்கி!

என மனதின் புலம்பல்.

சிறுகதை



மருமகள்கள் இருவரும் பேசுவதை கவனிக்க மனம் மறுத்தாலும் காதில் நாரசமாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

"புவனா, உன் மாமனாருக்கு இந்த வயசிலேயும் வேலைக்காரி என்கிற பேரிலே கூத்தியாள் வைத்துக் கொள்ள ஆசை வந்திருக்கிறது பார்த்தாயா?" என்றாள் சுகன்யா.

"ஏன் அப்படிச் சொல்கிறாய் சுகு...?"

"பின்ன என்னடி... நம்ம மாமியார் செத்து ஒரு வாரம் தானாகிறது. ஒன்று உன் குடும்பத்தோடு வந்து தங்க வேண்டும், இல்லையெனில் எங்கள் குடும்பத்தோடு வந்து தங்க வேண்டும்; அதை விட்டுவிட்டு இங்கே ஒரு வேலைக்காரியை வைத்து சமைத்துக் கொண்டு இந்த கிராமத்திலேயே தங்கிக் கொள்கிறேன் என்கிறாரே" என்றாள் சுகன்யா.

ஓடிப்போய் ஒரு அறை விடலாம் என்று கோபம் வந்தது வேலுவிற்கு; இருப்பினும் அடக்கிக் கொண்டார்.

அடுத்த அறையினுள் இன்னும் அவருடைய வாரிசுகள் மோகனும் குமணனும் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

சிறுகதை

"நீ மட்டும் அப்பாவின் சொத்தில் அதிக பங்கை எடுத்துக் கொண்டவன் தானே? நீயோ அப்பாவைப் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டவன். அதனாலே அப்பாவை அழைத்துக் கொண்டு போய் உன்னோடு வைத்துக் கொள்" என்றான் குமணன்.

"எனக்கு அதிக பங்கு தந்ததற்கு காரணம், நான் சம்பாதித்த பணத்தில் வாங்கிய சொத்துக்கள் என்பதால்தான், புரிகிறதா? எனவே, இளைய பையன் நீ வீட்டை எடுத்துக் கொண்டதைப் போல, அப்பாவையும் உன்னோடு வைத்துப் பார்த்துக் கொள்" என்றான் மோகன்.

பெரியவர் வேலுவிற்கு கோபம் பீறிக்கொண்டு வந்தது. "என்னைப் பற்றி ஏன் இவர்கள் வீணாக சண்டையிடுகிறார்கள்? நான் இவர்களோடு போய்த் தங்கியிருந்தால் 'சோறு போடுவார்களா?' என்று காவல் இருக்க வேண்டுமா? நேற்று இவர்களிடம் விவரமாக எடுத்துச் சொன்ன பிறகும் ஏன் என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்? இதற்கு என்ன தீர்வு கண்டாலும் நான் இவர்களோடு போய்த் தங்கப் போவதில்லை என்பது இந்த மரமண்டைகளுக்கு ஏன் புரிய மறுக்கிறது?

சரி! இவர்களுக்குள் என்னதான் முடிவிற்கு வருகிறார்கள் என்று பார்க்கலாம் என்று எண்ணியவாறு அவர்களின் பேச்சுவார்த்தையைக் கவனித்துக் கொண்டிருந்தார். இப்போது மோகனும் குமணனும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த இடத்தில் புவனாவும் சுகன்யாவும் வந்து சேர்ந்திருந்தனர்.

"மாமா தான் எங்கேயும் வரமாட்டேன் என்கிறாரே, அவரை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடலாமே; நம்முடைய நிலபுலன்களைப் பார்ப்பதற்கு ஒரு ஆள் இருந்தது மாதிரி இருக்கும்" என்றாள் புவனா.

"சும்மா இரு புவனா. அப்பா இப்போதே கண்பார்வை சரியாக இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறார்; இதிலே கையில் ஊன்றுகம்பு வேறு ஊன்றிக் கொண்டுதான் நடக்கிறார்கள். அவர்களை இங்கே தனியே விட்டுவிட்டுப் போனால் ஏதாவது ஒன்று-கிடக்க ஒன்று ஆச்சுதென்றால் யார் கவனிப்பார்கள்?" என்றான் மோகன்.

"அதற்காக நம்மோடு வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வைத்துக் கொள்ள முடியுமா? ஏற்கனவே ஒற்றை அறையில் தங்கிக் கொண்டு குழந்தைகளுடன் தங்கியபடியே பிரைவசி இல்லை எனத் தவித்துக் கொண்டிருக்கிறோம். இதிலே உங்கள் அப்பாவையும் தங்க வைக்க முடியுமா?"

"இனி ஏதாவது செய்துதான் ஆக வேண்டும், வேறு வழியில்லை" என்றான் குமணன்.

"அப்படியென்றால் நீங்கள் உங்கள் வீட்டிலேயே கூட்டிக் கொண்டு வைத்துக் கொண்டு சாப்பாடு போடுங்கள். என்ன செலவாகிறதோ, மாதா மாதம் பாதிப் பணம் எங்கள் வீட்டுக்காரர் தந்து விடுவார். உங்கள் வீடு பெரிய வீடுதானே, அப்பாவிற்கு ஒரு அறையை ஒதுக்கி விட வேண்டியது தானே" என்றாள் புவனா.

சுகன்யா இடைமறித்து, "அதெல்லாம் முடியாத காரியம். ஏற்கனவே குழந்தைகள் படிக்க மாட்டேன் என்கிறார்கள். இனி தாத்தா இருந்தால் அது வேறு கொண்டாட்டம்! அங்கேயெல்லாம் மாமாவை வைத்து சாப்பாடு போட முடியாது" என்றாள்.

"இதற்கு என்னதான் வழி?" என்று கத்தினான் குமணன்.

"வீணாக ஏன் கூப்பாடு போடுகிறாய்? ஒன்று செய்யலாம். அப்பா ஒரு மாதம் உங்களோடு இருக்கட்டும், இன்னொரு மாதம் எங்களோடு இருக்கட்டும்" என்றான் மோகன்.

"அதுவும் சரியான வழிதான். அப்படியே செய்யலாம்" என்றான் குமணன், மனைவியின் கண்களில் எழுந்த கோபக்கனலைப் பார்த்துக் கொண்டே...
"நீ என்ன சொல்கிறாய்?" மனைவியிடம் கேட்டான் மோகன்.
"சரி, வேறு வழியில்லை. நாம் ஒரு மாதம் பார்த்துக் கொண்டோமென்றால் அவர்கள் ஒரு மாதம் பார்த்துக் கொள்வது சரி. நம் வீட்டிலிருந்து அவர்கள் வீட்டிற்குப் போகும் போது நாம் கொண்டுபோய் விட்டு வரவேண்டும்; அதுபோல அவர்கள் வீட்டிலிருந்து நம் வீட்டிற்கு வரும் போது அவர்கள் கொண்டு வந்து விட வேண்டும்" என்றாள் புவனா.

"மிகச் சரி" என்றாள் சுகன்யா.

இடையில் புகுந்து பெரியவர் வேலு, "நீங்கள் என்ன சொல்லியும் நான் கேட்கப் போவதில்லை. நான் வாழ்ந்த கிராமம் இது. இங்கு எனக்கு நேரம் போவதற்கு என் நிலம், ஈரமட்டைகள், தென்னந்தோப்பு, நண்பர்கள் இருக்கிறார்கள். அதனால் அம்மாவின் காரியத்தை முடித்துவிட்டு நீங்கள் கிளம்புங்கள்" என்று உறுமினார்.

"அப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்கள்! சமைக்க வேண்டாமா?" என்றான் குமணன்.

"டேய்! உன் மனைவி நான் வேலைக்காரி வைத்துக் கொண்டு சமைக்கிறேன் என்றதற்கே நான் இந்த வயதிலும் கூத்தியாள் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன் என்கிறாள்" என்று சொல்லி முடிப்பதற்குள், "அப்படியா சொன்னாய்?" என்று கத்தினான் குமணன்.

"சும்மா பூச்சாண்டி காட்டாதே! உன் மனைவியிடம் நீ எவ்வளவு பயந்து நடந்து கொண்டிருக்கிறாய் என எனக்கு நன்றாகவே தெரியும்.

என் செலவுக்குத் தென்னந்தோப்பிலிருந்து வருமானம் வருகிறது. சாப்பாடு எப்படியாவது ஒரு வேலையாள் வைத்து சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு என் மீதமுள்ள நாட்களை நான் கழித்துக் கொள்வேன். இனி என்னைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டு, கைத்தடியை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

கவியரசு முடியரசன்

கட்டுரை

முன்னுரை



தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதையின் வாயிலாகத் தமிழ்மொழியின் பெருமையையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையும், மனிதநேயத்தையும் எடுத்துரைத்த கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவியரசு முடியரசன். மரபுக் கவிதையின் இனிமையையும் முற்போக்குச் சிந்தனைகளையும் இணைத்துப் பாடியவர். தாம் எழுதிய கவிதைகளில் வலியுறுத்திய கொள்கைகளுக்கு ஏற்ப வாழ்ந்த கவிஞராகவும் அவர் போற்றப்படுகிறார்.

பிறப்பும் இளமைக் காலமும்

கவியரசு முடியரசன் 1920 அக்டோபர் 7ஆம் நாள், அன்றைய மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் துரைராசு. இவரது பெற்றோர் சுப்பராயலு, சீதாலட்சுமி ஆவர். பின்னாளில் தமது பெயரைத் தூய தமிழில் முடியரசன் என்று மாற்றிக்கொண்டார்.

சிறுவயதிலிருந்தே தமிழ்மொழியின்மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவருடைய தாய்மாமா துரைசாமியும் கவிதை இயற்றும் திறமை கொண்டவராக இருந்தார். அவருடைய வழிகாட்டுதலால் முடியரசனுக்குக் கவிதை எழுதும் ஆர்வம் வளர்ந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பிரவேச பண்டிதம் பயின்ற இவர், பின்னர் மேலைச்சிவபுரியில் உள்ள கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் கல்வி பயின்றார். தமிழ் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றார்.

இலக்கியப் பயணம்

முடியரசன், பாரதியாரின் எழுச்சிமிக்க சிந்தனைகளாலும் பாவேந்தர் பாரதிதாசனின் புரட்சிகரக் கவிதைகளாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டார். குறிப்பாக, பாரதிதாசனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அவர், அவருடைய முற்போக்குக் கருத்துகளைத் தமது படைப்புகளில் வெளிப்படுத்தினார்.

கட்டுரை

இலக்கியப் பயணம்

1941ஆம் ஆண்டில், தமது 21ஆம் வயதில், "சாதி என்பது நமக்கு ஏனோ?" என்ற தலைப்பில் கவிதை எழுதி வெளியிட்டார் என்று இலக்கியக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சாதிப் பாகுபாடுகளையும் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் பழக்கவழக்கங்களையும் எதிர்த்து அவர் தொடர்ந்து குரல் கொடுத்தார்.



மரபுக் கவிதையின் யாப்பு அமைப்பையும் சொல் வளத்தையும் கைவிடாமல், புதிய சிந்தனைகளைத் தமது கவிதைகளில் புகுத்தினார். எளிய சொற்கள், இனிய ஓசை, தெளிவான கருத்துகள் ஆகியவை இவருடைய கவிதைகளின் சிறப்புகளாக விளங்கின. கவியரங்க மேடைகளிலும் அவர் தமது கவித்திறனால் மக்களைக் கவர்ந்தார்.

தமிழ்மொழிப் பற்று

முடியரசனின் கவிதைகளில் தமிழ்மொழிப் பற்று முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. தாய்மொழி என்பது வெறும் தொடர்புக் கருவி மட்டுமல்ல; அது ஒரு இனத்தின் பண்பாடு, வரலாறு, சிந்தனை, அடையாளம் ஆகியவற்றின் அடித்தளம் என்பதை அவர் வலியுறுத்தினார்.

தமிழ் கல்வி, தமிழ்வழிக் கற்பித்தல், தூய தமிழ்ப் பயன்பாடு ஆகியவற்றின் தேவையைத் தமது படைப்புகள் வாயிலாக எடுத்துரைத்தார். அன்றாட வாழ்விலும் மொழிப் பயன்பாட்டிலும் தமிழுக்கு உரிய இடம் கிடைக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது.

"தமிழ் முழக்கம்", "தாய்மொழி காப்போம்", "எப்படி வளரும் தமிழ்" போன்ற நூல்களின் தலைப்புகளே மொழி வளர்ச்சியிலும் தமிழ்ப் பாதுகாப்பிலும் அவர் கொண்டிருந்த அக்கறையை உணர்த்துகின்றன. தமிழ்மொழியைப் போற்றுவது மட்டுமன்றி, அதை வாழ்வில் பயன்படுத்திப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

கட்டுரை

சமூகச் சீர்திருத்தமும் பகுத்தறிவும்

முடியரசன் ஒரு கவிஞராக மட்டுமன்றி, சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளராகவும் விளங்கினார். சாதி வேறுபாடு, மூடநம்பிக்கை, பொருளற்ற சடங்குகள், மனிதர்களிடையே பாகுபாடு காட்டும் நடைமுறைகள் ஆகியவற்றை எதிர்த்தார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சிந்தனைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற கருத்தைத் தமது கவிதைகளில் வலியுறுத்தினார்.

தமது வாழ்க்கையிலும் சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றினார். சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்டதோடு, இறப்புக்குப் பின்னரும் தேவையற்ற சடங்குகள் வேண்டாம் என்று விரும்பியவர். அவர் போதித்த கொள்கைகளுக்கும் அவர் வாழ்ந்த முறைக்கும் இடையே ஒற்றுமை இருந்தது என்பது அவரது தனிச்சிறப்பாகும்.

முக்கியப் படைப்புகள்

முடியரசன் பல கவிதைத் தொகுதிகளையும் காப்பியங்களையும் பிற இலக்கிய நூல்களையும் படைத்துள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

- முடியரசன் கவிதைகள் — இவரது கவிதைகளைத் தொகுத்து 1954ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்.
- காவியப் பாவை — இவரது குறிப்பிடத்தக்க படைப்புகளில் ஒன்று.
- பூங்கொடி — புகழ்பெற்ற காப்பியப் படைப்பு.
- வீரகாவியம் — இவரது காப்பியப் படைப்புகளில் ஒன்று.
- கவியரங்கில் முடியரசன் — கவியரங்கக் கவிதைகளின் தொகுப்பு.
- தமிழ் முழக்கம் — தமிழ்மொழிப் பற்றை வெளிப்படுத்தும் படைப்பு.
- தாய்மொழி காப்போம் — தாய்மொழியின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் வலியுறுத்தும் நூல்.
- மனிதனைத் தேடுகிறேன் — மனிதநேயச் சிந்தனையை எடுத்துரைக்கும் படைப்பு.

இவரது படைப்புகள் தமிழ் இலக்கிய உலகில் தனித்த இடத்தைப் பெற்றுள்ளன. இவரது கவிதைகளில் சில பகுதிகள் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கட்டுரை

ஆசிரியர் பணி மற்றும் விருதுகள்

முடியரசன் தமிழாசிரியராகப் பணியாற்றினார். சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர் காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியிலும் பணியாற்றியதாக வாழ்க்கைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆசிரியர் பணியோடு இலக்கியப் பணியையும் தொடர்ந்து மேற்கொண்டார்.

அவருடைய படைப்புகளுக்குத் தமிழக அரசின் பாராட்டும் பரிசுகளும் கிடைத்தன. முடியரசன் கவிதைகள் நூலுக்காகவும் பூங்கொடி காப்பியத்திற்காகவும் தமிழக அரசின் பரிசு பெற்றார். மேலும் பாவேந்தர் விருது, கலைஞர் விருது, கலைமாமணி போன்ற விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டன. இவை அவரது இலக்கியப் பங்களிப்புக்குக் கிடைத்த அங்கீகாரங்களாகும்.

மறைவும் நிலைத்த புகழும்

கவியரசு முடியரசன் 1998 டிசம்பர் 3ஆம் நாள் மறைந்தார். அவர் மறைந்தாலும், தமிழ்மொழி, சமூகநீதி, பகுத்தறிவு, மனிதநேயம் ஆகியவற்றை வலியுறுத்திய அவரது படைப்புகள் இன்றும் வாசகர்களுக்கு வழிகாட்டுகின்றன.

அவரது படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டங்களிலும் அவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இது அவரது இலக்கியப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை

கவியரசு முடியரசன் தமிழ்மொழியின் பெருமையைப் பாடியவர்; சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டித்தவர்; மனிதநேயத்தையும் சமத்துவத்தையும் முன்னிறுத்தியவர். மரபுக் கவிதையின் அழகையும் புரட்சிச் சிந்தனையின் வலிமையையும் ஒன்றிணைத்த அவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க செல்வங்களாகும்.

தமிழைப் போற்றுதல், மனிதர்களைச் சமமாக மதித்தல், பகுத்தறிவுடன் வாழ்தல் ஆகிய உயரிய கருத்துகளைத் தனது கவிதைகளிலும் வாழ்க்கையிலும் நிலைநாட்டிய கவியரசு முடியரசன், தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் நினைவுகூரப்பட வேண்டிய கவிஞர்.



நாளை நமதே

கொள்கையில் நிலையாயிரு மனிதா — கொண்ட
கொள்கையில் நிலையாயிரு மனிதா — எந்தக்
கொடுமைகள் வந்தாலும் கலையாதிரு மனிதா

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com